## அரச கரும மொழிகள் ஆணைக்குழு – 2017

-----------------------------------------------------------------

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2018 யூலை 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

மூலதன மானியத்தைக் கணக்கிலிடுவதற்கு ஆணைக்குழு நிச்சயமான கணக்கீட்டுக் கொள்கையை இனங்கண்டிருக்காது, பெறப்படும் மூலதன மானியத்தை திரண்ட நிதியத்தில் நேரடியாகவே மூலதனமாக்குவதாகக் கணக்கீட்டுக் குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 2,061,704 பெறுமதியான அலுவலக உபகரணங்களுக்கு மீளாய்வாண்டின் பொருட்டு ரூபா 206,170 தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழு அமைந்துள்ள அமைச்சினது கட்டிடத்தின் அலுவலகங்களை வெவ்வேறாக்குதல் மற்றும் கார்பட் இடுதல் என்பவற்றிற்கு மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு மூலதன நிதியேற்பாட்டிலிருந்து செலவழித்த ரூபா 1,308,800 மீண்டுவரும் செலவினமாக வருமானக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த மூலதன நிதியேற்பாடு வருமானத்தின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினது இறுதியில் உள்ளவாறான காசேட்டு மீதி ரூபா 71,520 ஆகிய போதும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 106,370 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 34,850 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | அடுத்து வரும் மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டினது 05 மாதங்களது பங்களிப்புத் தொகையான ரூபா 1,020,296 கொடுப்பனவு செய்யப்பட்டது 24 நாட்கள் முதல் 04 மாதங்கள் வரையிலானதாக தாமதத்தின் பின்னரே. |
| (ஆ) | 1982 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 3.1 ஆம் பிரிவு | அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது 07 மாத காலப் பங்களிப்புத் தொகையான ரூபா 211,769 இருபது நாட்கள் முதல் 05 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னரே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) | நிதிப்பிரமாணங்கள் 103, 104 என்பன | வாகன விபத்தால் ஏற்பட்ட ரூபா 24,000 இழப்பு தொடர்பாகப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்ட தினத்திலிருந்து 6 மாதம் கடந்தும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாது உள்ள ரூபா 162,900 பெறுமதியான 57 காசோலைகள் சம்பந்தமாகப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 219,650 கூட்டுத் தொகையுடைய செயல் நிமித்த கட்டு நிதி 2 ½ முதல் 3 ½ மாத கால தாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்குரிய பொருட் கணிப்பு அறிக்கை 2018 ஆகஸ்ட் 05 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் நிதிப்பெறுபேறு ரூபா 6,818,913 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,705,554 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேற்றில் ரூபா 4,113,359 நலிவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டுவரும் மானியம் ரூபா 417,300 குறைந்தமையும் தேய்மானம், பழுதுபார்த்தலும் பராமரித்தலும் என்பன முறையே ரூபா 1,978,898 மற்றும் ரூபா 1,719,831 என்பவற்றால் அதிகரித்தமையும் நிதிப் பெறுபேற்று நலிவுக்கான பிரதான காரணங்களாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 3,131,575 பற்றாக்குறையானது படிப்படியாகக் குறைந்து 2015 ஆம் ஆண்டில் மிகையாக மாறியபோதும், மீண்டும் 2016 ஆம் ஆண்டில் பற்றாக்குறை ஏற்பட்டு, 2017 ஆம் ஆண்டில் அப்பற்றாக்குறை ரூபா 6,818,913 வரை பெருமளவு அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பன மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் ரூபா 6,545,326 பங்களிப்பானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 17,670,540 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளானபோதும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் குறைந்தவாறு 2017 ஆம் ஆண்டில் ரூபா 12,150,773 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடு

வாடகைக் கட்டிடம் ஒன்றில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் அலுவலகம் அக்கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு 2017 நவம்பரில் அமைச்சினது கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 சனவரி வரை 02 மாத காலத்திற்கு வாடகைக் கட்டிட உரிமையாளருக்கு ரூபா 900,000 கட்டிட வாடகையுடன் நாளொன்றிற்கு ரூபா 25,000 வீதம் நாளாந்தக் கட்டணமாக ரூபா 1,550,000 என மொத்தமாக ரூபா 2,450,000 கொடுப்பனவு செய்யப்படுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

### 4.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினது மோட்டார் வாகனமொன்று 2017 ஆகஸ்ட் 27 தொடக்கம் 2018 யூலை 12 வரை ஏறக்குறைய 11 மாதங்களாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) தேவையைச் சரிவர உணராது 2012 க்கு முன்பிருந்தே அச்சிட்டிருந்த 12,652 அருஞ் சொல் அகராதிகள் மற்றும் கற்கை நெறிப் புத்தகங்கள் என்பவற்றில் ரூபா 773,815 பெறுமதியான 9,855 புத்தகங்கள், அதாவது, 78 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு எஞ்சியிருந்தன.

### 4.3 பதவியணி நிர்வாகம்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 41 ஆகும். உள்ளவாறான எண்ணிக்கை 24 ஆகியமையால் 17 வெற்றிடங்கள் நிலவின. 2016 முதல் நிலவிய 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டினது ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு அரச கரும மொழிகள் ஆணைக்குழு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயலாற்றுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்தவாறு, 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக நிறுவனம் அறிந்ததையடுத்து அரசகரும மொழிகள் ஆணைக்குழு தனது பரப்பெல்லையின் பிரகாரம் அடைய வேண்டிய நோக்கமாக ''வேறுபாடுகளைக் குறைத்தல்'' என்பதை இனங்கண்டிருந்தபோதும், அது சம்பந்தமான இலக்கும் அவ்விலக்கை அடையும் வழிவகைகளையும் செயல் முன்னேற்றத்தை அளவிடுதலும் தொடர்பான சுட்டினை இனங்காண்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது அரச கரும மொழிகள் ஆணைக்குழு ரூபா 715,670 பெறுமதியான 03 லேசர் பிரின்டர்களையும் அலுவலக உபகரணங்களையும் கொள்வனவு செய்யும்போது கேள்வி கோரிய நாட் தொடக்கம் பொருளானது நிறுவனத்தை வந்தடையும் தினம் வரை (GRN வழங்கிய திகதி) முறையே 20 மற்றும் 19 வாரங்கள் கழிந்திருந்தமையால், பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) வழிகாட்டிக்குப் புறம்பான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 2,134,760 பெறுமதியான 06 பொருட் கொள்வனவுகள் நடைபெற்றபோதும், அவை பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி தவறில்லாது பேரேட்டில் காட்டப்படாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்புகளைத் தவறின்றிக் கணக்கிலிடாமை. |
| (ஆ) | ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல். | கையிருப்புப் புத்தகங்கள் நாளது வரையாக்கப்படாமை மற்றும் காசேட்டில் செலவுக் கணக்கு இலக்கம் சரிவரக் குறிப்பிடப்படாமை. |
| (இ) | பொருட் கொள்வனவு | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்கையில் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.3.(அ), 6.3.6 மற்றும் 7.9.2 எனும் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. |